**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண்.194** **நாள் : 29.07.2025**

**மாண்புமிகு மேயர் திருமதி ஆர்.பிரியா அவர்கள் தலைமையில் பெருநகர சென்னை மாநகராட்சியின் சார்பில் நடைபெற்று வரும் சென்னை பள்ளிகளின் கல்வி வளர்ச்சி, மாணவர்களின் சேர்க்கை மற்றும் மாண்புமிகு மேயர் அவர்களின் அறிவிப்பின்படி மேற்கொள்ளப்பட்டுள்ள பணிகள் குறித்த ஆய்வுக் கூட்டம் இன்று நடைபெற்றது.**

பெருநகர சென்னை மாநகராட்சியின் சென்னை பள்ளிகளில் 35 மேல்நிலைப்பள்ளிகள், 46 உயர்நிலைப்பள்ளிகள், 130 நடுநிலைப்பள்ளிகள், 206 தொடக்கப்பள்ளிகள் என மொத்தம் 417 சென்னை பள்ளிகள் மற்றும் அதனுடன் 336 மழலையர் வகுப்புகளில் எல்.கே.ஜி., யூ.கே.ஜி. முதல் 12 ஆம் வகுப்பு வரை பயிலும் 1 லட்சத்திற்கும் மேற்பட்ட மாணவர்களுக்கு சிறப்பான முறையில் கல்வி கற்பிக்கப்பட்டு வருகிறது.

இந்த சென்னை பள்ளிகளில் செயல்படுத்தப்பட்டு வரும் கல்வி வளர்ச்சி, மாணவர்களின் சேர்க்கை மற்றும் மாண்புமிகு மேயர் அவர்களின் அறிவிப்பின்படி மேற்கொள்ளப்பட்டுள்ள பணிகள் குறித்த ஆய்வுக் கூட்டம் மாண்புமிகு மேயர் திருமதி ஆர்.பிரியா அவர்கள் தலைமையில் இன்று (29.07.2025) ரிப்பன் கட்டட வளாகக் கூட்டரங்கில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில், மாண்புமிகு மேயர் அவர்கள், சென்னை பள்ளிகளில் 10 மற்றும் 12ஆம் வகுப்பு அரசு பொதுத் தேர்வில் மாணவர்களின் தேர்ச்சி சதவீதம், மாணவர்கள் பெற்ற மதிப்பெண் விவரம், மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கான நடவடிக்கைகள், மாணவர்களின் சேர்க்கை விவரம், பள்ளிகளுக்குத் தேவைப்படும் உட்கட்டமைப்பு வசதிகள், மாண்புமிகு மேயர் அவர்களின் அறிவிப்பின்படி, கல்வி தொடர்பாக மாநகராட்சி பள்ளிகளில் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் குறித்து ஆய்வு மேற்கொண்டு ஆலோசனைகளை வழங்கினார்.

இக்கூட்டத்தில், மதிப்பிற்குரிய துணை மேயர் திரு.மு.மகேஷ்குமார், ஆணையாளர் திரு.ஜெ.குமரகுருபரன், இ.ஆ.ப., துணை ஆணையாளர் (வருவாய் (ம) நிதி) திரு.ம.பிரதிவிராஜ், இ.ஆ.ப., வட்டார துணை ஆணையாளர்கள் திரு.எச்.ஆர்.கௌஷிக், இ.ஆ.ப., (மத்தியம்), திரு.கட்டா ரவி தேஜா, இ.ஆ.ப., (வடக்கு), நிலைக்குழுத் தலைவர் (கல்வி) பாலவாக்கம் திரு.த.விசுவநாதன் மற்றும் கல்வி அலுவலர்கள், ஆசிரியர்கள் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு** : **இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர், பெருநகர சென்னை மாநகராட்சி.**